பதிவு எண். M 6331 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible] : இரா. செழியன் [illegible]

மலர் : 19] சென்னை : கார்த்திகை 17 (3—12—71) வெள்ளி வெளியூர் : கார்த்திகை 18 (4—12—71) சனி [இதழ் : 143

பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய வீரர்கட்கு இலவசக் குடியிருப்பு மனை

ஆக்ரா, டிச. 3—

அண்மையில் 3 பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய மூன்று இந்திய விமானப் படை வீரர்களுக்கு இலவசமாக்க் குடியிருப்பு மனைகளை வழங்க ஆக்ரா மாநகராட்சிமன்றம் தீர்மானித்திருக்கிறது.

செல்வத்தைக்கொண்டு மனிதரை மதிப்பிடும் காலம் மாறிவிட்டது

எதிர்காலத்தை உணர்ந்து மன்னர் பரம்பரையினர் நடந்துகொள்ள வேண்டும்

மக்களவையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேச்சு

புதுடில்லி, நவ. 3-

"எந்த முன்னாள் மன்னர் மீதும் அல்லது அந்த அமைப்பின் மீதும் சொந்த முறையில் எனக்கு விரோத எண்ணம் எதுவும் கிடையாது; ஆனால், தனித் தகுதி ஏற்பாடு தான் நமக்குப் பிடிக்கவில்லை; நமது சமூகத்தில் இத்தகைய ஏற்பாடுக்கு இனி இடமே இல்லை – பொருத்தமும் இல்லை!

"தகுதி அல்லது செல்வத்தைக்கொண்டு உயர்ந்த நிலையை அளக்கும் காலம் ஒன்று இருந்தது; ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது; ஒருவர் தமது உயர்ந்த நிலையைக் காட்டிக் கொள்ளும் தகுதிகள் விரிவடைந்துவிட்டன; உண்மையில் இவற்றுக்கு வரம்பே இல்லை; ஆகவே, இம்மசோதா நடப்பு வரலாற்று உணர்ச்சியை எதிரொலிக்கிறது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில், மன்னர் மானிய ஒழிப்பு மசோதாமீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளிக்கையில் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :-

"முன்னாள் மன்னர்கள் தங்களது தனிச் சலுகைகளைக் கைவிடுவது நியாயமேயாகும்; இத்தகைய தனித் தகுதிக்கு எதிரான உணர்ச்சி பெரும் அளவில் மக்களிடையே நிலவுகிறது; வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் இதனை முன்னாள் மன்னர்கள் நோக்குவர் என்று நம்புகிறேன்; ஏற்றத்தாழ்வை அகற்றும் பணி நடந்துகொண்டிருக்கிறது.

"முன்னாள் மன்னர்கள் பலர், எதிர்காலத்தை உணர்ந்து நடந்துகொண்டு மாறுதல்களுக்கு ஏற்பத் தங்களைச் சரிப்படுத்திக் கொண்டனர் என்பதை ஒப்புக்கொள்கிறேன்; விருப்ப பூர்வமாகச் சலுகைகளைக் கைவிடுமாறு முன்னாள் மன்னர்களைத் தூண்ட முயற்சிக்கப்பட்டது; ஆனால் சிலரே இதற்குச் செவிசாய்த்தனர்; விவாதத்தின் மூலம் முடிவு ஏற்பட்டிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன்; பேச்சு வார்த்தையும் நடத்தப்பட்டது; ஆனால், இரு தரப்பினருக்குமிடையே பொது அம்சம் எதையும் காண முடியவில்லை; இத்தகைய பிரச்சினையில், முடிவு செய்வதைக் காலவரம்பின்றி ஒத்திவைப்பதற்கில்லை."

மகாராஜா பரம்பரையின் அவலக் குரல்

புதுடில்லி, டிச 3 –

மன்னர் மானிய ஒழிப்புக்கான அரசியல் சட்டத் திருத்த மசோதாமீது பேசிய மன்னர்கள் சங்கத் தலைவர் கேய்க்வாட், 'மகாராஜா இறந்துவிட்டார்' என்று கூறி, அமைச்சர் அமர்ந்திருந்த வரிசையைப் பார்த்து, 'வாழ்க — மகாராசாக்கள்' என்று வகுத்ததுடன் கூறினார்.

மேலும் அவர், 'மன்னர் மானியத்தை ஒழிப்பதன்மூலம் மன்னர்களையும் அரசுடைமை (தேசியமயம்) ஆக்குகிறார்கள்' என்று கூறினார்.

உடனே சட்ட அமைச்சர் கோகலே, 'மன்னர்களை நாங்கள் ஏன் அரசுடைமை ஆக்க வேண்டும்? பயன் அளிக்காத எந்த நிறுவனங்களையும் நாங்கள் அரசுடைமை ஆக்குவதில்லை' என்று கூறினார்.

மசோதாமீது பேசிய சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் தண்டவாதே, மன்னர் கெய்க்வாட் கூறியதை எடுத்துக் கூறி, 'இது ஆளுங் காங்கிரசுக்காரர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகும்' என்று குறிப்பிட்டார்.

"பழைய மகாராஜாக்களுக்குப் பதில் புதிய ஒரு அரசரம்பரை உருவாகாமல் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று அவர் எச்சரித்தார்.

யூகோஸ்லாவிய தலைவர் ஒருவர் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள்ளேயே புதிய ஒரு வர்க்கம் உருவாவதைச் சுட்டிக்காட்டியிருப்பதை எடுத்துக்காட்டி, 'அதே சரித்திரம் மீண்டும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்,

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்

கேரள அரசு நடவடிக்கை

திருவனந்தபுரம், டிச 3—

"நெறி தவறி நடந்துகொண்டதற்காக 10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்மீது கேரள அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது"

என்ற தகவலை, முதலமைச்சர் அச்சுதமேனன் தெரிவித்தார்.

செங்குட்டுவன் அமைத்த கண்ணகி சிலை

கேரளச் சட்டமன்றத்தில கேள்வி — பதில்

'கேரள எல்லையிலுள்ள சுருளி மலையில் கண்ணகியின் சிலை கண்டெடுக்கப்பட்டதா என்பது குறித்த விசாரணை நடைபெற்றுவருகிறது"

என்று, கேரளச் சட்டமன்றத்தில் போலீசுத் துறை அமைச்சர் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"இதுகுறித்துத் தகவல் தெரிவித்துத் தமிழக முதலமைச்சர் அனுப்பிய கடிதமொன்று வரப்பெற்றிருக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து வடித்த கண்ணகிச் சிலை இதுவே — எனத் தமிழ்நாட்டு ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்துள்ள தகவலை, தமிழக முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே வெளியிட்டுள்ளது நினைவிருக்கலாம்.

சட்டப் பேரவை நாளை தொடங்குகிறது

சென்னை, டிச. 3 —

தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டம் நாளை காலை 10-மணியளவில் தொடங்குகிறது; இந்தக் கூட்டத் தொடர் பத்து நாட்களுக்கு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை கூட்டத்தில் — கேள்விநேரத்திற்குப் பின் — ஓமியோபதி மருத்துவர்கள் தொழில்முறை மசோதாமீதான கூட்டு ஆய்வுக் குழுவின் அறிக்கையை, அமைச்சர் க. அன்பழகன் அவர்கள், அவையில் தாக்கல் செய்வார்.

முன்னாள் துணைக்குடியரசுத் தலைவர் ஹம்ப்ரியுடன் கலைஞர் சந்திப்பு

மேரிலாந்து ஆளுநரைச் சந்தித்து ஒரு மணி நேரப் பேச்சு

நியூயார்க், டிச. 3 —

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அமெரிக்காவிலுள்ள மேரிலாந்து ஆளுநர் மார்வின் மாண்டலை டிசம்பர் முதல் நாளன்று மதியம் 1-மணியளவில் அன்னாபொலீசு நகரில் சந்தித்தார்.

ஆளுநரைச் சந்தித்த தமிழக முதல்வர், கூட்டாட்சி முறைபற்றியும் — அமெரிக்க அரசுடன் மாநிலத்திலுள்ள உறவுகள் பற்றியும் விவாதித்தார்; அதிகாரப் பங்கீட்டில் ஏற்பட்ட அதிகாரிப்பு— மாநிலங்களுக்கான நிதி வருவாய்கள் ஆகியவை பற்றியும் விவாதித்தார்.

மாநில நிர்வாக அமைப்புப் பற்றியும், சனநாயக முறையிலான கூட்டாட்சி அரசுக்குத் தரப்படும் மானியங்கள் குறித்தும் முதல்வர் விவாதித்தார்.

மேரிலாந்து ஆளுநருக்குத் தமிழக முதல்வர் தமது கவிதைத் தொகுப்பைப் பரிசளித்தார்; தந்தத்தாலான சிலை ஒன்றையும் பரிசளித்தார்.

முன்னாள் குடியரசுத் துணைத் தலைவருடன் ....

பின்னர், முன்னாள் அமெரிக்கக் குடியரசுத் தலைவரும் — செனட் சபை உறுப்பினருமான ஹம்ப்ரியைச் சந்தித்தார்.

முதல்வரும்—ஹம்ப்ரியும் அரை மணி நேரம் உரையாடினர். இந்த உரையாடலின்போது இந்தியத் தூதுவரகத்தைச் சார்ந்த ராஸ் கோசுராவும், முரசொலி மாறனும் உடனிருந்தனர்.

திரு. ஹம்ப்ரீ இந்தியர்பால் கொண்டுள்ள நல்லெண்ணத்துக்கும்— அனுதாபமான நோக்கத்திற்கும் முதல்வர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

ஹம்ப்ரீயை இந்தியாவிற்கு — குறிப்பாகத் தமிழகத்திற்கு வருமாறு தமிழக முதல்வர் அழைப்புவிடுத்தார்.

"தற்போதைய (வங்காள தேச) பிரச்சினையில் பாகிஸ்தானோடு இந்தியாவை ஒப்பிடும் சிலரது போக்கு தவறு" என்று கலைஞர், ஹம்ப்ரேயிடம் குறிப்பிட்டார்; 'அகதிகள் இந்தியாவிற்கு வருவது என்பதும் மறைமுகமான ஆக்கிரமிப்பே' என்று கூறிய முதல்வர், 'அகதிகள் பிரச்சினை உலகமே பொறுப்பேற்க வேண்டிய ஒன்று' என்றும் விளக்கினார்.

மேலும் நடைபெற்ற கலந்துரையாடலில் ஹம்ப்ரே, 'சனநாயகத்தில எதிர்க் கட்சிக்கும் — நிர்வாகத்துக்குமுள்ள தொடர்பு, சில குறிப்பிட்ட அடிப்படைகளில் ஒத்துழைப்பதாகும்; கொள்கை அடிப்படையில்தான் வேற்றுமை இருக்கமுடியும்' என்று விளக்கினார்; 'இந்தியாவும் — அமெரிக்காவும் சனநாயகத்தைப் பொறுத்தவரையில பொதுவான உடன்பாடுள்ள நாடுகள்' என்று முதல்வரிடம் கூறினார்.

அண்மையில் அமெரிக்காவிற்கு வந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி, ஹம்ப்ரே தலைவராக உள்ள 'அனைத்துலகப் பிரச்சினைக்கான உட்ரோ வில்சன் நிலைய'த்திற்கு வருகை தந்ததற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும்படி, முதல்வரை, செனட்டர் ஹம்ப்ரே கேட்டுக் கொண்டார்.

பின்னர் முதலமைச்சர், சமூக மறுவாழ்வுப் பணி நிலையத்தைச் சார்ந்த டாக்டர் மெக்கார்ட்டேயைச் சந்தித்தார்; அவரிடம், பிச்சைக்காரர்கள் — குறிப்பாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் பற்றிய ஆய்வு நிலையம் அமைப்பதற்கான திட்டம் குறித்து கலந்துரையாடினார்.

பெரியாருக்குக் கடிதம்

அமெரிக்காவில சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்தபோதும் தமிழக முதல்வர், பெரியார் அவர்களின் உடல்நலம் விசாரித்து அன்பான கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

வேலைநிறுத்தத்தின் விளைவு

நெய்வேலி, டிச. 3—

தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக நெய்வேலி தொழிற்சாலையின் ஒரு பகுதி நேற்றிரவு மூடப்பட்டது.

நேற்றுக் காலை நெய்வேலி நிறுவன மருத்துவமனை ஊழியர்களுக்கும் — தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இரு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும் என்பதற்காக வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

‘உத்தரவிடும் காலம் மலையேறிவிட்டது’

‘வல்லரசுகள் இதனை உணருவது அவசியம்’

‘நாட்டின் நலனுக்கு விரோதமாக எதனையும் செய்வதற்கு நாம் தயாராக இல்லை’

தலைமையமைச்சர் இந்திரா காந்தி திட்டவட்ட அறிவிப்பு

புதுடில்லி, டிச. 3—

“இந்தியா ஆக்கிரமிப்பு எதுவும் செய்யாமல் இருக்கையில், ‘ஆக்கிரமிப்பாளர்கள்’ என்று நம்மைப் பற்றி யார் சொன்னாலும், அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

“சென்ற ஐந்தாண்டுகளில் காலம் மாறியிருக்கிறது; நம்மை, ‘ஆக்கிரமிப்பாளர்கள்’ என்று வர்ணிப்பதன்மூலம், நமது தேசிய நலன்களை நாம் மறந்துவிடும்படி நிர்ப்பந்தப்படுத்திவிடலாம் என்று எந்த நாடாவது நினைக்குமானால், அது கனவுதான் காண்கிறது என்று அர்த்தமாகும்!

“நாலாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு நாடு -- தாங்கள் வெள்ளை நிறத்தவர்கள் என்ற காரணத்தினால் -- இந்தியர்களுக்கு அங்கிருந்து உத்தரவு போட்ட காலம் மலையேறிவிட்டது!

“நமது தேசிய நலனுக்கு எது உகந்ததோ அதைத்தான் செய்வோம்; ‘வல்லரசுகள் விரும்புகின்றன’ என்பதற்காக -- நமது நலனுக்கு விரோதமாக எதையும் செய்யமாட்டோம்!

“நாம் வல்லரசுகளின் நேசத்தை -- உதவியை மதிக்கிறோம்; ஆனால், நமது நாட்டின் ஒற்றுமையையும், அடிப்படை உரிமையையும் விட்டுக்கொடுக்க முடியாது”

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இ. காங்கிரசு ஊழியர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில் அவர் உலக நாடுகளுக்குத் திட்டவட்ட அறிவிப்பாகக் கூறியதாவது :—

இனக் கொலைகள் நடைபெற்றபோது என்ன செய்தனர்?

“ஏராளமான வெளிநாட்டுப் பிரமுகர்கள் -- பல நாடுகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் -- அமெரிக்க செனட்டர்கள் -- நிவாரணக் குழுக்கள் -- தனிப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் -- அமைச்சர்கள் முதலானோர், கிழக்கு வங்கம் -- மேற்கு வங்க எல்லைகளுக்குச் சென்று அகதிகளின் அவதிகளை நேரில் பார்த்தார்கள்; பாகிஸ்தான் இராணுவத்தினர் வங்காள தேச மக்களுக்கு எதிராக எடுத்துக்கொண்ட பயங்கர நடவடிக்கைகளின் விளைவுகளை அவர்கள் நேரில் பார்த்தார்கள்; இதனால் வங்காள தேசத்தின் பிரச்சினை தீர்ந்ததா?

வங்காள தேசத்தில் இனக் கொலை புரிவதை நிறுத்தும்படி எந்த வல்லரசாவது பாகிஸ்தானிடம் கூறியதா? -- கூறவில்லை; அம்மாதிரி கூறமாட்டார்கள்.

அமைதி ஏற்படுவதற்கு ஒரு வழிதான் உண்டு

வங்க தேசத்திலிருந்து பாகிஸ்தான் இராணுவத்தைத் திரும்பப் பெறும்படி கூறுவதன் மூலம்தான் வங்க தேசப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்; பாகிஸ்தான், இராணுவம் வெளியேறினால்தான், தங்கள் வீடு வாசல்களைத் துறந்து வெளியேறிச் சென்ற இலட்சக்கணக்கான அகதிகள் நாட்டுக்குத் திரும்பி அமைதியாக வாழ்க்கை நடத்த முடியும்.

இந்தியாவின் கிழக்கு எல்லையிலிருந்தும் -- மேற்கு எல்லையிலிருந்தும் பாகிஸ்தான் இராணுவம் வெளியேறினால்தான் இந்தத் துணைக் கண்டத்தில் மீண்டும் அமைதி ஏற்படும்.

புரியாத புதிர் இது?

பாகிஸ்தான் தனது இராணுவத்தை இந்திய எல்லைகளுக்கு அருகில் கொண்டுவந்து குவித்தபோது, இந்த நாடுகளில் எதுவும் ஒரு வார்த்தை சொல்லவில்லை; ஐ. நா.-வும் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை; ஆனால், இந்தியா தனது எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் படைகளை எல்லைக்குக் கொண்டு போனவுடன், சமாதானத்துக்கு அபாயம் வந்துவிட்டதாக ஏகப்பட்ட கூச்சல் கிளம்பிவிட்டது; ஏன் இப்படி என்று எனக்குப் புரியவேயில்லை.

ஐ. நா. தயார்தானா?

‘பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்காது’ என்று ஐ. நா. உறுதி அளிக்கத் தயாரா? அம்மாதிரி தாக்குதல் நடந்தால் பாகிஸ்தானால் வசப்படுத்திக்கொள்ளப்பட்ட பகுதிகளிலிருந்து அது வெளியேறும்படி ஐ. நா. செய்யுமா?

நம்பிக்கையை இவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா?

கிழக்கு எல்லை அல்லது மேற்கு எல்லையிலிருந்து இந்தியா தனது படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று கூறுவதற்கு முனையுமுன், ஒன்றை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்; இதற்குமுன் இந்தியாவைப் பாகிஸ்தான் மூன்று தடவை தாக்கியிருக்கிறது; ஆனால் ஐ நா.-வோ, வல்லரசுகளோ ஒரு தடவைகூட அதற்காகப் பாகிஸ்தானைக் கண்டிக்கவில்லை; இப்போது நாம் அவர்களை நம்பவேண்டும் என எப்படி எதிர்பார்க்க முடியும்?

பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் முன்னணி நிலைகளில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டபின், பத்து நாட்கள் வரையில் நாம், நமது படைகளை மேற்கு எல்லைக்குக் கொண்டு போகவில்லை; நாம் ஐ. நா. பார்வையாளர்களிடம் சென்று, ‘பாகிஸ்தான் தனது படைகளை முன்னணி நிலைகளுக்குக் கொண்டுபோய் நிறுத்த அனுமதிக்கக் கூடாது’ என்று விண்ணப்பித்தோம்; ஐ. நா. பார்வையாளர்கள் இதுபற்றி விசாரித்துவிட்டு, ‘பாகிஸ்தான் படையினர் இராணுவ ஒத்திகைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்’ என்றும், பத்து நாட்களுக்குப் பின் திரும்பிவிடுவார்கள் என்றும் நம்மிடம் கூறினார்கள். இன்னும் பத்து நாட்கள் ஆகவில்லையா? இப்படியெல்லாம் நடைபெற்றிருக்கையில், நமக்கு எப்படி அவர்களிடம் நம்பிக்கை ஏற்படும்.

அங்கே நடைபெற்றதை மறந்தேவிட்டனர்

ஐ. நா. நோக்கர்களைக் கிழக்கு வங்கத்தில் நிறுத்த வேண்டும் என்று கூறப்படுவதன் நோக்கம், ‘வங்க தேச விடுதலைப் படையின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும்’ என்பதேயாகும்; ஆனால், வியட்நாமில் மேற்கொள்ளப்பட்ட எல்லாதவிதமான கண்காணிப்புகளும், கட்டுப்பாடுகளும் கொரில்லா நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

ஐ. நா. நோக்கர்களின் பாதுகாப்புக்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது என்று வங்காள தேச அரசு தெளிவாகத் தெரிவித்துவிட்டது; இந்நிலைமையில், அங்கு ஐ. நா. நோக்கர்கள் எப்படிச் செயல்பட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

நாம் எப்படித் தடுத்து நிறுத்த முடியும்?

வங்க தேச விடுதலைப் படையினர் இந்திய மண்ணிலிருந்து கொண்டு செயல்பட இந்தியா அனுமதிக்கிறது -- என்று நம் மீது குற்றஞ் சாட்டப்படுகிறது; நாம் எப்படி அதைத் தடுக்க முடியும்? இந்தியா—கிழக்கு வங்காள எல்லை வெகு நீளமானது; இந்தியா தனது இராணுவம் முழுவதையும் நிறுத்தினால்கூட அவர்களைத் தடுக்க இயலாது.

ஐ. நா.-வோ, மற்ற எந்த நாடோ இப்பிரச்சினையை -- எல்லா அம்சங்களையும் சேர்த்து முழுமையாகக் கவனிக்கத் தயாராக இல்லை.

அவர்களுக்குக் கவலையில்லை -- நமக்கும் அப்படியா?

ஒரு அண்டை நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாகக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது; வங்காள தேசத்துக்குள் என்ன நடக்கிறது என்று உலகத்துக்கு எடுத்துச் சொல்லுகிறோம் -- அவ்வளவுதான்; ஆயிரக்கணக்கானவர்கள் படுகொலை செய்வதுபற்றி உலகத்துக்குக் கவலையில்லாமல் இருக்கலாம்; ஆனால் இந்தியா கவலைப்படுகிறது; அகதிகள் இங்கு வர அனுமதிப்பதற்கு இதுதான் காரணம்.

பாகிஸ்தானின் சொந்த விவகாரத்தில் இந்தியா தலையிடுவதாக இன்று கூச்சலோடும் நாடுகளெல்லாம் தங்கள் நலனுக்கு இசைவாக இருக்கும் என்று கருதிய சமயங்களில் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டிருக்கின்றன; இங்கு நாம் அம்மாதிரி எதுவும் செய்யாதிருக்கையில், நம்மீது அக்குற்றச்சாட்டு கூறப்படுகிறது; நாம் இதைப் பற்றி கவலைப்படவில்லை, சீனா போன்ற நாடுகூட, மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டிருக்கின்றன.”

நடக்க இருப்பவை

4--12--71

திண்டுக்கல்

நகர முன்னேற்றத் தொழிற்சங்கப் பேரவை சார்பில் இரவு 7-மணிக்கு கச்சேரித் தெருவில்; தலைவர்: ஓ. என். சிவஞானம்; பேசுவோர்; டி. ஆர். இராசன், ஜொன். சீனிவாசன், என். முத்து, டாக்டர் ஆர். முனியப்பன், டாக்டர் து. இராமலிங்கம், கே. பி. குப்புசாமி எம்.சி., எஸ். வரதராசன் எம்.சி., கே. டி. அரசு எம்.சி., மெ. கருப்பையா, டி. எஸ். சேசன், எஸ். ஏ. இராசன், கே. வி. குமாரவேலு, எஸ். ஏ. சேதுராமலிங்கம், என். கோபால், ஜி. முத்துகிருஷ்ணன், ஆர். மாரிமுத்து, மற்றும் பலர்.

செவ்வாய்க் கிரகத்தில் இரஷ்யக் கொடி

மாஸ்கோ, டிச. 2—

“செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் இரஷ்யாவின் தேசிய இலச்சினையைக் கொண்ட ஒரு கொடியை இரஷ்யா வைத்திருக்கிறது”

என்று, இரஷ்யச் செய்தி நிறுவனம் கூறியிருக்கிறது.

அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டுள்ள ஐயம்

கலிபோர்னியா, டிச. 2—

செவ்வாய்க் கிரகத்தில் இரஷ்யாவின் ‘மார்ஸ்-2’ விண்வெளிக் கப்பல், ஒரு கூண்டை இறக்கியிருப்பதாக இரஷ்யா அறிவித்திருப்பதானது, அமெரிக்க விஞ்ஞானிகளிடையே ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தகவல்களை அனுப்பக்கூடிய கருவிகளை இந்தக் கூண்டில் வைத்து இரஷ்யா இறங்கியிருக்கிறதா அல்லது ஒரு கொடியை மட்டும்தான் இறக்கியிருக்கிறதா என்பதுதான் இந்தச் சந்தேகம்.

ஆனால் இங்குள்ளவர்களின் பொதுவான கருத்து, ‘பாரசூட்’டில் கருவிகளும் -- கொடியும் கொண்ட கூண்டு இறக்கப்பட்டிருக்கலாம் என்பதுதான்!

இந்தியத் துணிகள் இரஷ்யாவுக்கு ஏற்றுமதி

சென்னை, டிச. 2—

இந்திய நிறுவனங்கள் தயாரிக்கும் துணி வகைகளை இரஷ்யா அதிகமாக வாங்கத் தொடங்கியிருக்கிறது.

1970—71-ல் ரூ. 9.07 கோடி பெறுமானமுள்ள கம்பளித் துணிகள் இரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இதே காலத்தில், பெல்ஜியம் -- ஹங்கேரி நாடுகளில் இந்தியக் கம்பளத் துணிகளுக்குப் புதிய வரவேற்பு கிடைத்திருக்கிறது.

ஹாங்காங், சுவீடன், ஜாம்பியா நாடுகளுக்குச் செய்த ஏற்றுமதிகளால் நல்ல இலாபம் கிடைத்திருக்கிறது.

கம்பளி உரோமம் -- துணிகள் ஆகியவற்றின் ஏற்றுமதியால் சென்ற ஆண்டில் ரூ. 30 கோடி வருவாய் கிடைத்திருக்கிறது.

ஈ.எஸ்.ஐ. டாக்டர்கட்கு ஊதிய உயர்வு

புதுடில்லி, டிச. 2—

“அரசாங்க இன்ஷ்யூரன்சுத் திட்டத்தின்கீழ் உள்ள டாக்டர்கள் இதுவரை ஒரு தொழிலாளியின் குடும்ப யூனிட்டுக்கு ஆண்டுக்கு ரூ. 20 வீதம் பெற்றுவந்தார்கள்; அவர்களுக்கு 1971 அக்டோபர் 31-லிருந்து ரூ. 5 ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது (அதாவது யூனிட்டுக்கு ரூ. 25); இதனால், சுமார் 4,000 டாக்டர்கள் நன்மையடைவார்கள்”

என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் காடில்கர், மக்களவையில் தெரிவித்தார்.

தலைநிமிர்ந்து நிற்போம்!

எந்த நிலைமையையும் சமாளிக்கத்தயாராவோம்

தலைமையமைச்சர் இந்திரா காந்தி செய்தி

புதுடில்லி, டிச. 3—

“போர் ஏற்பட்டால் பல சிரமங்களை மக்கள் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கும்; அந்நிய உதவியை நீண்ட காலத்துக்கு நம்பியிருக்க முடியாது; எல்லாத் துறைகளிலும் நம் தேவைகளை நாமே நிறைவு செய்துகொள்ளும் நிலைமையை அடைய வேண்டும்.

“இங்கிருந்து அல்லது அங்கிருந்து கிடைக்கும் சிறிய உதவிகளுக்காக இந்தியா தனது தேசிய நலன்களைப் புறக்கணிக்க முடியாது என்பதை உலக நாடுகள் உணர வேண்டும்.

“இந்தியா பெருமைமிக்க மக்களைக் கொண்ட ஒரு நாடு; ஒவ்வொருவரும் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும்; துணிவுடனும் -- உறுதியுடனும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டும்; நீண்ட காலம் நடக்கும் போரில் நாட்டின் சுதந்தரத்தைப் பாதுகாக்க மக்கள் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும்.

“நமது இராணுவத்தின் திறமையில் நமக்கு முழு நம்பிக்கையிருக்கிறது; முப்படைகளின் அதிகாரிகளும்--வீரர்களும் நாட்டின் கௌரவத்தையும் அடிப்படை உரிமையையும் பாதுகாக்கத் தயாராக இருக்கிறார்கள்; நாம் தலைநிமிர்ந்து நின்று--சிலவற்றைப் பிரச்சினைகளை மறந்து -- அவர்களுக்கு எல்லா உதவிகளையும் அளிக்க வேண்டும்; எந்த நிலைமையையும் சமாளிக்க இந்தியாவால் முடியும் என்பதை உலகுக்குக் காட்ட வேண்டும்.

“என்ன அபாயங்கள் வந்தாலும், எல்லாத் துறைகளிலும் தேசிய வாழ்க்கைப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும்; தொழிற்சாலைகள் -- வயல்கள் -- அலுவலகங்களில் வழக்கம்போல் வேலைகள் நடைபெற வேண்டும்; குழந்தைகள் பள்ளிகளுக்கும் -- இளைஞர்கள் கல்லூரிகளுக்கும், தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் செல்ல வேண்டும்; இதையெல்லாம் நாம் தொடர்ந்து செய்தோமானால் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

“விமானச் சண்டையில் ஈடுபட்ட நான்கு விமானிகளில் மூவர் கிறித்துவர்களாவர்; ‘மைனாரிடி’யினர் எந்தப் புகார் சொல்லவும் இடமின்றிப் பெரும்பான்மை வகுப்பினர் நடந்துகொள்ள வேண்டும்.

“விலைவாசிகள் ஏறுமலும், பதுக்கல் -- கள்ளமார்க்கெட் நடக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.”

(இ. காங்கிரஸ ஊழியர் கூட்டத்தில்)

அமெரிக்க ஆராய்ச்சியாளர்களிடை கலைஞர்

தமிழகத்தைப் பற்றிய பல்வேறு கேள்விகட்கும் பதில்

மாநில சுயாட்சிக் கோரிக்கை பற்றி அரிய விளக்கம்

சிகாகோ, நவ. 30—

சிகாகோ பல்கலைக் கழகத்தில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றியதும், அங்கு கூடியிருந்தோர் கேட்ட பல்வேறு கேள்விகட்கும் கலைஞர் விடையளித்து அரிய விளக்கங்கள் தந்தார்.

தமிழ்நாட்டைப் பற்றியும், தமிழக அரசியல் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியும் எந்த அளவுக்கு நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு அவர்கள் கேட்ட கேள்விகளே சான்று பகரும்.

எழுப்பப்பட்ட வினாக்களும் -- கலைஞரின் விடைகளும் வருமாறு;—

கேள்வி :—“ திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையை நீங்கள் ஏற்ற பிறகு பெரியாருடன் அதிகமான நெருக்கம் ஏற்பட்டிருப்பதாக நாங்கள் உணருகிறோம்; அதுபற்றித் தங்கள் கருத்து என்ன?”

பதில் :—“ ஆம்; பெரியாருக்கும் -- எங்களுக்கும் நெருக்கம் ஏற்பட்டிருப்பது உண்மைதான்.”

மத்திய -- மாநில உறவு நிலை

கேள்வி :— “மத்திய -- மாநில உறவுகள் மற்றியும், அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றியும் குறிப்பிட்டீர்கள்; அதன் நோக்கம் என்ன? என்னென்ன மாதிரியான மாற்றங்களையும், திருத்தங்களையும் அரசியல் சட்டத்தில் செய்ய விரும்புகிறீர்கள்?”

பதில் :—“ அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்வது என்பது, அமெரிக்கா--இந்தியா போன்ற நாடுகளுக்குப் புதிதல்ல; நாங்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பதன் நோக்கம், ‘மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் கொண்டதாக இருக்க வேண்டும் -- மாநிலங்களில் பதவியில் இருக்கின்றவர்கள் கையில் அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும்’ என்கின்ற ஆசையால் அல்ல; மக்களுக்கு அண்மையில் இருக்கும் மாநிலங்கள் அந்த மக்களுக்கு அதிக நன்மைகளைச் செய்வதற்கு இப்போது இருப்பதைவிட அதிக அதிகாரங்கள் தேவைப்படுகின்றன; என்னென்ன அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை -- அரசியல் சட்டத்தில் என்னென்ன மாற்றங்கள் வேண்டும் -- என்பதை ஆய்வதற்குத்தான் நாங்கள், இராசமன்னார் குழுவினை நியமித்தோம்; அந்தக் குழு, அடையாள பூர்வமான அறிக்கை ஒன்றை அளித்திருக்கிறது; அதை நாங்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறோம்; அந்த அறிக்கை, மத்திய -- மாநில புதிய உறவுகள் பற்றிய எந்தப் பேச்சுவார்த்தைக்கும் ஓர் ஆதாரமான சான்றாக இருக்கிறது; அவ்வறிக்கையில், ‘எதை ஏற்றுக்கொள்வது--எதை மாற்றுவது’ என்பன போன்ற முடிவுகள் இனிதான் எடுக்கப்பட வேண்டும்.”

கேள்வி :—“ இராசமன்னார் குழு அறிக்கை பற்றிய முடிவினை நீங்கள் எடுத்த பிறகு, அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு என்னென்ன செய்வீர்கள்?”

பதில் :— “சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் அதைப் பற்றிய விவரங்களை எழுதுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்; பொதுமக்கள் ஆதரவின்றி எந்தவிதச் சீர்திருத்தங்களையும் கொண்டுவர முடியாது; எனவே, எல்லாவற்றிற்கும் மேலாகப் பொதுமக்களிடையே அம்முடிவுகளைப் பற்றியும் -- அவற்றின் அவசியம் பற்றியும் தகுந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தப் பாடுபடுவோம்; அதற்குப் பிறகு செய்ய வேண்டியவற்றை மத்திய அரசு கவனிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.”

கழக ஆட்சியின் சாதனைகள்

கேள்வி :—“ திரு. காமராஜ் முதலமைச்சராகத் தமிழ்நாட்டில் இருந்த காலத்தில், அவர் செய்யத் தவறிய காரியங்கள் என்னென்ன என்று கூற முடியுமா?”

பதில் :—“ அவர் செய்யத் தவறிய காரியங்களைக் கூறக்கூடாது என்பதற்காகத்தான், நாங்கள், எங்கள் ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகளைக் கூறினேன்; அதை வைத்தே நீங்கள் முடிவுக்கு வரலாம்.”

கேள்வி :—“ தமிழ்நாட்டில் பதவியில் இருக்கும் தி. மு. கழகம், மத்தியில் ஆளும் கட்சியான காங்கிரசு அல்லாத கட்சியாக இருக்கிறது; நீங்கள், காங்கிரசு அல்லாத கட்சியாக இருப்பதால், மத்திய -- மாநில உறவுகளில் என்னென்ன சங்கடங்களை அனுபவிக்கிறீர்கள்?”

பதில் :—“ நாங்கள் மத்திய அரசாங்கத்தை ஆளுங்கட்சியைச் சாராதவர்கள் என்பதால், மத்திய -- மாநில உறவுகளில் எந்த விதப் புதிய சங்கடங்களும் ஏற்பட்டுவிடவில்லை; மத்திய-மாநில உறவில் சிக்கல்கள் -- சங்கடங்கள் என்பவை இப்போது இருக்கின்ற (அரசியல் சட்ட) அமைப்பிலேயே புதைந்து கிடக்கின்றன; மத்தியிலே ஒரு கட்சி -- மாநிலத்திலே வேறு கட்சி என்பதால் மட்டும் புதிய சங்கடங்கள் உருவாகிவிடவில்லை.”

தவறான கருத்துக்கு மறுப்பும் விளக்கமும்

கேள்வி :—“ தி. மு. க.-விற்கும் -- ஆளும் காங்கிரசுக்கும் 1971 தேர்தல் நேரத்தில் ஒரு தேர்தல் கூட்டு ஏற்பட்டதைப் பார்த்தோம்; இந்தக் கூட்டு, கிருஷ்ணகிரி தேர்தலிலும் நீடித்ததையும் கண்டோம்; இந்தக் கூட்டினால் யாருக்கு இலாபம்? தி. மு. க.-வினால் ஆளும் காங்கிரசுக்கு இலாபமா அல்லது ஆளும் காங்கிரசால் தி. மு. க.-விற்கு இலாபமா?”

பதில் :—“ முதலில் ஒரு தவறான எண்ணத்தைப் போக்க விரும்புகிறேன்; தி. மு. க.-விற்கும்— ஆளும் காங்கிரசிற்கும் ஏற்பட்டது கூட்டு அல்ல -- இது ஒரு தேர்தல் (அட்ஜஸ்மெண்ட்) சீரமைப்பு ஆகும்; இலாப -- நட்டத்தைக் கணக்குப் பார்த்து நாங்கள் இந்த ஏற்பாட்டினை செய்துகொள்ளவில்லை; முற்போக்கு எண்ணம் கொண்ட இரண்டு கட்சிகள் இணைந்து செயல்படுவது ஆச்சரியத்திற்கு உரியதல்ல; ‘இந்தியாவை ஒரு புதிய பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் -- புதிய சிந்தனையோடு செயல்பட வேண்டும்’ என்கின்ற நோக்கத்தைச் செயல்படுத்தவே நாங்கள் இந்த முடிவினை மேற்கொண்டோம்.

இலங்கையிலிருந்து திரும்பி வருவோர்

கேள்வி :—“ இலங்கையிலிருந்து வரவேண்டிய அளவு தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்திற்குத் திரும்பி வந்ததாகத் தெரியவில்லை; இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?”

பதில் :—“ எங்களுக்குப் பளுகுறைவாக இருப்பதுவரை திருப்திதான்.”

தமிழ்ப் பாடமொழிப் பிரச்சினை

கேள்வி :—“ உங்கள் அரசின் பயிற்சி மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில், தமிழ்ப் பாட மொழித் திட்டத்திற்கு எதிர்ப்பு இருக்கிறதே -- அதுபற்றிய தங்கள் கருத்து என்ன? விளைவுகள் என்ன?”

பதில் :—“ அந்த எதிர்ப்பினை நாங்கள் அலட்சியப்படுத்தவில்லை; அதே நேரத்தில், ‘தமிழ்ப் பாடமொழியாக வேண்டும்’ என்பதில் எங்கள் தீவிரம் குறைந்துவிடவில்லை; நீங்கள் குறிப்பிட்ட அந்த எதிர்ப்பு இருந்தும், தமிழைப் பாட மொழியாகப் பயிலும் மாணவர்கள் தொகை சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறையவில்லை; அப்படிப் பயிலுகின்ற மாணவர்களுக்கு நாங்கள் நிதியுதவி அளித்து வருகிறோம்; தமிழ்ப் பாட மொழியினை விரும்பாதவர்கள் வேறு மொழியில் பயிலுவதற்கும் வசதி செய்து கொடுத்திருக்கிறோம்; கல்வியைப் பொறுத்தவரையில் இருமொழிக் கொள்கை திட்டமிட்டபடி பின்பற்றப்படுகிறது.

தொழில் வளர்ச்சிக் கொள்கை விளக்கம்

கேள்வி :—“ வேறு மாநிலங்களை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட வளர்ச்சியைப் பார்க்க முடிகிறது என்றாலும், உங்களது திட்டமான தொழில் வளர்ச்சிக் கொள்கை என்ன?”

பதில் :—“ பொதுத் துறையில் பெரிய தொழில்களை நடத்த வேண்டும் என்பதும் -- சோஷலிச சமுதாயம் அமைக்க வேண்டும் என்பதும் எங்கள் குறிக்கோளாக இருந்தாலும், நாங்கள் எந்தவித வைதீக மனப்பான்மையிலும் எங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. தனியார் துறையும் -- பொதுத் துறையும் இணைந்து பணியாற்றும் கூட்டுத் துறையிலும் நாங்கள் சில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.”

மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு மற்ற மாநிலங்களின் ஆதரவு

கேள்வி :—“ மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்கின்ற உங்கள் கருத்திற்கு வெளிமாநிலங்களில் ஆதரவு இருக்கிறதா?”

பதில் :—“ இல்லாமல் போய்விடவில்லை; மைசூர் முன்னாள் முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல், ஆந்திர முன்னாள் முதல்வர் திரு. பிரும்மானந்த ரெட்டி போன்றவர்கள் வெளிப்படையாகவே தங்கள் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள்.”

சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்

கேள்வி :— “நீங்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறீர்கள்; அதுபோலவே தமிழ்நாட்டின் இதர பகுதிகளும் சுயாட்சி கேட்கலாம் அல்லவா?”

பதில் :—“ இந்தியாவில் மாநிலங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கின்றன; எனவே, தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்குச் சுயாட்சி என்று கேட்பதில் அர்த்தமில்லை; ஆனால், நகராட்சி போன்ற உள் அமைப்புகள் அதிக அதிகாரங்களைக் கேட்பார்களேயானால் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வோம் -- ‘சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்’ என்று!”

தனிப் பிரிவு தேவையன்று

கேள்வி :—“ தி.மு.க.-வில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஒரு தனிப் பிரிவு வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததாக அறிகிறோம்; தி. மு. கழகப் பொதுக்குழுவும் அது பற்றி விவாதித்ததாகத் தெரிகிறது; அதைப் பற்றி என்ன முடிவு செய்யப்பட்டது?”

பதில் :—“ பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே தாழ்த்தப்பட்ட -- பின்தங்கிய வகுப்பினர்தான்; எனவே, தாழ்த்தப்பட்டவர்கட்கு என்று ஒரு தனி உள் அமைப்பு தேவையில்லை என்று முடிவு செய்துவிட்டோம்.”

சமுதாயமும் திரையுலகமும்

கேள்வி :—“ தமிழ்த் திரையுலகம் ஒரு சமயம் சமுதாய சீர்திருத்தக் கருவியாக இருந்தது; ‘அதற்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவர்’ என்கின்ற முறையில் இப்போது திரையுலகம் எந்தத் திசை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்று கூற முடியுமா?”

பதில் :—“ முன்பு வரை திரையுலகம் சமுதாயத்தை விமர்சித்துக் கொண்டிருந்தது; இப்போது சமுதாயம் திரையுலகத்தை விமர்சித்துக் கொண்டிருக்கிறது.”

அறவழி -- அன்புவழியைப் பின்பற்றுகிறோம்

கேள்வி :—‘ நீங்கள் திருக்குறளைப் பின்பற்றி ஆட்சி நடத்துவதாகக் கூறினீர்கள்; தற்கால அரசியல் முறை பற்றி திருக்குறளில் அப்படி என்ன கூறப்பட்டிருக்கிறது?”

பதில் :—“ எங்கள் ஆட்சிமுறைக்குத் திருக்குறளே ஆதாரம் என்று நான் கூறவில்லை; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசியலுக்கென்று ஒரு அதிகாரம் படைத்த திருக்குறள் தோன்றிய மண்ணிலிருந்து வந்தவன் என்றுதான் கூறினேன். மேலும், திருக்குறள் முடியாட்சி பற்றிக் கூறுகின்றது; தற்போதைய குடியாட்சியைப் பற்றிப் பேசவில்லை; ஆனால் திருக்குறள் முழுவதும் இழையோடிக் கொண்டிருப்பது அன்புவழி— அறவழி; அதைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்.”

மாணவர் சமுதாயத்தின் தொடர்பு நிலை

கேள்வி :— “ தி. மு. க.-விற்கும் —மாணவர் சமுதாயத்திற்கும் அதிகத் தொடர்பு இருந்தும்கூட முன்பு அண்ணா காலத்தில் அவர்கள், அண்ணாவைவிடத் தீவிரமாக இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுக் கிளர்ச்சி மேற்கொண்டார்கள்; பின்னர், தமிழ்ப் பாட மொழிக்கு எதிராக எதிர்ப்பு இருந்தது; பிறகு பஸ் தொழிலாளர்—மாணவர் தகராறு மூண்டது; இவ்வளவு கருத்து வேற்றுமைகளுக்கு இடையே மாணவர்கள் உங்கள் கட்சிக்குத் துணையாக இருக்க முடியுமா?”

பதில்:—“சனநாயகத்தில் கருத்து வேற்றுமைகள் இருப்பதும், சிலருக்கு ஆகஸ்டில் ஒரு கருத்தும்-- செப்டம்பரில் வேறு கருத்தும் இருப்பதும் சாதாரணம் தானே” இதற்கு மாணவர்கள் விதிவிலக்கு அல்லர்; இந்தி எதிர்ப்பில் மாணவர்களைவிட அண்ணா தீவிரம் குறைந்தவராக இருந்தார் என்பது தவறு; ‘மக்கள் எங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியிருக்கிறார்கள்; எனவே, நீங்கள் செய்ய விரும்புகின்ற காரியங்களை நாங்களே முறைப்படியாக செய்து முடிக்கிறோம்; எனவே, பிரச்சினையை எங்களிடம் விட்டுவிடுங்கள் என்றுதான் அண்ணா கூறினார்; இது இந்திப் பிரச்சினையில் தீவிரக் குறைவு ஆகாது.

“தமிழ்ப் பாடமொழி குறித்து முன்பே சொல்லிவிட்டேன்; பஸ் தொழிலாளர் — மாணவர் தகராறை அமெரிக்காவரை வந்து விவாதிக்க வேண்டிய விவகாரம் இல்லை.”

பெரியார் கொள்கையும் கழகத்தின் செயல் முறைகளும்

கேள்வி :— “பெரியாருக்கும்— தி.மு.க.-விற்கும் நெருக்கம் அதிகமாக இருப்பதைக் குறிப்பிட்டீர்கள்; தேர்தல் நேரம் சேலத்தில் நடந்தது போன்ற பெரியாரின் செயல்களை முழுக்க முழுக்க நீங்கள் ஆதரிக்கிறீர்களா?”

பதில் :—“ பெரியார் கொண்டிருக்கின்ற கொள்கைகள் வேறு — அவர் மேற்கொள்கின்ற செயல்கள் வேறு; கொள்கைகளில் உடன்பாடு இருந்தாலும் செயல்களை நாங்கள் அப்படியே ஆதரிப்பது கிடையாது; சேலம் நிகழ்ச்சிகளுக்காக நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்பதை இதற்கு உதாரணமாகக் காட்ட விரும்புகிறேன்; மற்றவர்கள் உள்ளங்களைப் பண்படுத்த வேண்டுமே தவிர, புண்படுத்தக் கூடாது என்பதுதான் எங்கள் செயல்முறை.”

‘சுதந்தரா’க்களின் முகமூடியைக் கிழிக்கிறார்

தலைமையமைச்சர்

“சுதந்தராக் கட்சியினர் மிகப் பெரிய குறிக்கோள், பொதுத் துறையைத் தாக்கவேண்டும் என்பதுதான்; நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன் -- ஆமதாபாத்தில் நூற்பாலைகள் மோசமாக இயங்குவதற்கு யார் காரணம்? உ. பி. சர்க்கரை ஆலைகளுக்கும் -- கணேஷ் மாவு ஆலைக்கும் அந்த ஆலைகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் இப்போது என் இல்லத்திற்கு அருகில் திரண்டு வந்து பட்டினி கிடப்பது ஏன்? அந்த மக்களைச் சந்திக்க, சுதந்தராக் கட்சி உறுப்பினர்கள் வெளியில் சென்று பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில பொதுத் துறை நிறுவனங்கள் சரியாக இயங்கவில்லை என்பது உண்மையே; இவற்றில் சிலவற்றிற்குச் சரியான காரணங்கள் இருக்கின்றன; சிலவற்றுக்குக் காரணம் ஏதும் இல்லாமல் இருக்கலாம்; ஆனால் சுதந்தராக் கட்சியோ, கெடுதல்களை எடுத்துக்காட்டுவதில்தான் அக்கறை செலுத்துகின்றன; சரியானவைகளை -- அதன் உண்மைகளை மறைக்கப் பார்க்கின்றனர்.

எழுத்தறிவின்மை அகற்றப்படவில்லையா?

கடந்த 24 ஆண்டுகளில் எழுத்தறிவின்மை அகற்றப்படவில்லை என்று கூறுவது தவறாகும்; உலக மாற்றங்களின் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் நமது மக்கள் உணரும் தகுதி பெற்றிருக்கின்றனர்; நமது நாட்டு மக்கள் பெற்றிருக்கும் இந்த அறிவுத் தகுதி, மிக அதிக எழுத்தறிவு பெற்றிருக்கும் எந்த நாட்டு மக்களுக்கும் குறைந்ததல்ல என்று நான் பெருமையுடன் கூறிக்கொள்ள இயலும்.

--- இந்திரா காந்தி

(நாடாளுமன்றத்தில்)

உரம் தெளிக்கப் புதிய இயந்திரம்

750 காலன் உரத்தை வயல்களில் ஒரே சீராக நின்ற இடத்திலிருந்து 60 அடி சுற்றளவில் இரண்டே நிமிடங்களில் தெளிக்கக்கூடிய புதிய சாதனம் ஒன்று பிரிட்டனில் தயாராகியிருக்கிறது.

டிராக்டர்களோடு இணைத்து --- வேண்டிய இடத்திற்குக் கொண்டு சென்று -- உரம் இடுவதற்கு இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தலாம்.

அறுபதடி தூர வட்டத்தில் எல்லா இடங்களிலும் ஒரே சீரான அளவில் உரத்தைத் தெளிக்க வல்ல இக்கருவி ஒரு மலிவு விலைத் தயாரிப்பு.

டிராக்டரோடு இணைத்து இயக்கக்கூடிய இந்த இயந்திரத்தை முன்னால் இருந்தபடியே இயக்க முடியும்; கருவியில் உள்ள தெளிப்பான் வட்டமாகச் சுழலக்கூடியது; எனவே, நாலா பக்கமும் உரம் சீராகத் தெளிக்கப்பட்டு விடுகிறது.

அமெரிக்க அதிபரின் செஞ்சீனப் பயணம்

வாஷிங்டன், டிச. 2—

அதிபர் நிக்சன் சீன மக்கள் குடியரசுப் பயணத்தை வரும் பிப்ரவரி 21-ம் நாள் தொடங்குவார்.

பயணத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன; சீனத் தலைவர்களுடன் அதிபரின் சந்திப்புக்கான பொது ஏற்பாடும் செய்தாகிவிட்டது.

“இந்தச் சந்திப்பின்மூலம் இரு நாடுகளுக்கிடையேயுள்ள உறவுகளில் புதிய திருப்பம் ஒன்றை நாடுவதற்கும் -- இவ்விரு நாடுகளின் பெருமக்கள் தொடர்பின்றித் தனியாக ஒதுங்கியிருக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் வழிகோலப்படும்” எனக் கூறப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

திரிபுரா தலைநகரில் தொடர்ந்து வாலாட்டம்

எதிரியின் கொட்டத்தை அடக்க உடனடி நடவடிக்கை — இராணுவத் தளபதியுடன் ஜெகஜீவன்ராம் கலந்தாலோசனை

புதுடில்லி, டிச. 3—

திரிபுராவின் தலைநகரான அகர்தாலா நகரைத் தொடர்ந்து தாக்கிவரும் பாகிஸ்தான் இராணுவத்தினரின் கொட்டத்தை அடக்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு அப்பகுதியின் இராணுவத் தளபதிக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இன்னமும் தொடர்ந்து சுட்டுக்கொண்டிருக்கும் பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு உதவியாகப் பாகிஸ்தான் விமானப் படையைச் சேர்ந்த மூன்று சேபர் ஜெட் விமானங்கள், விமான நிலையத்தையும் — அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தாக்க முனைந்தன; உடனே இந்திய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் முழங்கின; ஒரு விமானம் வீழ்ந்துவிட்டது; இரு விமானங்கள் தப்பியோடி விட்டன.

இந்தியக் குடிமக்கள் பலி

பாகிஸ்தான் இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதல் காரணமாகப் பல இந்தியக் குடிமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

எல்லையைக் கடந்து சென்று துரத்துமாறு அனுமதி

இதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் குருப்புகள் மறைந்திருந்து சுடும் இடத்தைக் கண்டுபிடித்து — அவர்களின் கொட்டத்தை அடக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்தியத் தளபதிக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது; தேவைப்பட்டால் எல்லையைக் கடந்து சென்று எதிரியைத் துரத்தவும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

உடனடி ஆலோசனை

நேற்று பகல் 12·30 மணியளவில் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய விமானத் தளத்தின் மீது மிகவும் கீழாகப் பறந்து சென்றன.

பாகிஸ்தான் பீரங்கிப் படையினரின் குண்டுகள் பல முறை திரிபுரா தலைநகரான அகர்தாலாவைத் தாக்கவிருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், தலைமைத் தளபதி மானெக் ஷாவுடனும் — பாதுகாப்புத் துறைச் செயலாளர் கே. பி. லாலுடனும் அவசர ஆலோசனை நடத்திப் புதிய உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆயினும், இந்திய இராணுவத்தின் திறமையில் முழு நம்பிக்கை இருப்பதால், பெரும்பாலான மக்கள் துணிந்து எல்லைப் பகுதியிலேயே இருந்து வருகிறார்கள்.

ஊரடங்குச் சட்டம்

எந்த நிலைமையையும் சமாளிக்கும் பொருட்டு அகர்தாலாவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பெருஞ்சேதம் இல்லை

பாகிஸ்தான் விமானங்களின் அத்து மீறல்களால் இந்திய விமானத் தளத்துக்குப் பெருஞ் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

தாக்குதலின் நோக்கம்?

கடந்த மூன்று நாட்களில், அகர்தாலாமீது பாகிஸ்தான் குண்டு மாரி பொழிவது இது இரண்டாவது தடவையாகும்.

இந்தப் பகுதி மக்களைப் பீதியடையச் செய்வதே பாகிஸ்தான் இராணுவத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

பிரச்சினை அதிகரிக்கிறது

எல்லைப்புற மக்கள் பயந்து வேறிடங்களைத் தேடிச் செல்வதால், ஏற்கனவே அகதிகள் பிரச்சினையைத் தாங்கிக் கொண்டிருக்கும் இந்தியாவுக்குத் தனது சொந்த நாட்டு அகதிகளின் பிரச்சினையும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

டாக்காவில் விடுதலைப் படை

தாக்குப் பிடிக்க முடியாமல் பாகிஸ்தான் திணறல்

டாக்கா, டிச. 3—

கிழக்கு வங்கத்தின் தலைநகரான டாக்காவில் 2,000 வங்க தேச விடுதலைப் படையினர் இயங்கி வருகின்றனர்.

இவர்களுடைய திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் இராணுவம் திணறுகிறது.

கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாகக் கிழக்கு வங்கத்தின் பாகிஸ்தான் படைத் தளபதி மிரட்டியிருக்கிறார்.

ஜெஸ்சூர் வீழ்ச்சி உறுதியாகிறது

புதுடில்லி, டிச. 3—

கிழக்கு வங்கத்தைச் சேர்ந்த ஜெஸ்சூர் நகரத்தை வங்க தேச விடுதலைப் படையினர் கைப்பற்றுவது உறுதியாகிவிட்டது.

பாகிஸ்தான் படையினர் வசமுள்ள அந்நகரைச் சுற்றிலும் விடுதலைப் படையினரின் முற்றுகையும் — தாக்குதலும் மும்முரமாக இருக்கின்றன; விரைவில் ஜெஸ்சூர் நகரம் விடுதலைப்படையினரின் வசமாகிவிடும்.

சிட்டகாங்கில் வெடிச் சம்பவம்

மின்சார நிலையங்களுக்கு பெருஞ் சேதம்

சிட்டகாங், டிச. 3—

சிட்டகாங்கில் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்ட பல வெடிச் சம்பவங்களின் விளைவாக ஐந்து மின்சாரத் துணைநிலையங்கள் சிதைந்தோ அல்லது சேதப்படுத்தப்பட்டோ விட்டன.

இந்த வெடிச் சம்பவங்கள் அரை மணி நேரம் நீடித்தன; இதனால் பல பெட்ரோல் நிலையங்கள் நாசமடைந்தன அல்லது சேதமடைந்தன.

முஜிபுர் ரகிமான் மீதான விசாரணை

தொடர்ந்து நடைபெறுகிறதாம்

இஸ்லாமாபாத், டிச. 3—

கிழக்கு வங்கத் தலைவர் முஜிபுர் ரகிமான் மீதான விசாரணை இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகப் பாகிஸ்தான் அதிகார வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

கடந்த மார்ச் 25-ம் நாள் கைது செய்யப்பட்ட முஜிபுர் ரகிமான் இன்னமும் காவலிலேயே இருந்துவருகிறார்.

நலமுடன் இருக்கிறாராம்

இராவல்பிண்டி, டிச. 3—

"ஷேக் முஜிபுர் ரகிமான் உடல் நலத்துடன் இருக்கிறார்" என்று பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் கூறியதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

சந்திக்க அனுமதி மறுப்பு

அமெரிக்க செனட்டர் வில்லியம் சாக்ஸ்பே, நேற்று யாகியா கானைச் சந்தித்து, முஜிபுர் ரகிமானைப் பார்க்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார்; அனுமதி தர யாகியா கான் மறுத்துவிட்டார்.

உலக நாடுகளிடம் யாகியா கான் ஓலம்

போரைத் தவிர்க்க முயற்சிக்கிறாராம்

புதுடில்லி, டிச. 3—

"இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிவரும் அபாயச் சூழ்நிலையை எடுத்துக் கூறி, உலக நாடுகளிடம் யாகியா கான் தொடர்பு கொண்டிருக்கிறார்"

என்று இராவல்பிண்டி செய்தி ஒன்று கூறுகிறது.

"ஒரு பெரிய போராட்டத்துக்கு நாங்கள் இழுத்துச் செல்லப்படுகிறோம்; முழு அளவுக்குப் போரைத் தவிர்க்கும் பொருட்டுப் பாகிஸ்தான் எல்லாவிதமான இராசதந்திரங்களையும் கையாளுகிறது என்று அதிபர் யாகியா கான் கூறினார்"

என்று பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

பெண் என்பதால் எந்தச் சலுகையையும் எதிர்பார்க்கவில்லை

பிராங்க் அந்தோணிக்கு இந்திரா காந்தி பதில்

புதுடில்லி, டிச. 3—

தலைமையமைச்சராக ஒரு பெண்மணி (இந்திரா காந்தி) பதவி வகிப்பது குறித்து நாடாளுமன்றத்தில் சூடான விவாதம் நடைபெற்றது.

"நமது தலைமையமைச்சர் ஒரு பெண் என்பதால், அவருடைய சில கருத்துக்களுக்கு நான் மறுப்புச் சொல்ல விரும்பவில்லை" என்று பிராங்க் அந்தோணி (சுயே) கூறினார்.

உடனே இந்திரா காந்தி எழுந்து கூறியதாவது:—

"பெண்ணாக இருப்பதற்காக நான் எந்தவிதச் சலுகையையும் எதிர்பார்க்கவில்லை; அப்படிப் பாகுபாடு பார்த்த காலம் மலையேறி விட்டது; 'மக்களில் ஒருவள்' என்றுதான் என்னைக் கருத வேண்டுமே தவிர, 'பெண்' என்று மட்டும் நினைக்க வேண்டியதில்லை; 'ஆண்' என்பதாலோ 'பெண்' என்பதாலோ நாம் இங்கு (அவைக்கு) வரவில்லை; மனிதர்கள் என்ற முறையில்தான் வந்திருக்கிறோம்."

பாகிஸ்தானின் குட்டித் தலைவர் மிரட்டல்

காஷ்மீரைக் கைப்பற்ற ஏற்பாடாம்

இராவல்பிண்டி, டிச. 3—

'இந்திய நகரத்தைத் தாக்குவோம்' என்று பாகிஸ்தான் வசம் உள்ள காஷ்மீரின் தலைவர் சர்தார் முகமது அப்துல் கையூம் மிரட்டியிருக்கிறார்.

பஞ்சாப் மாநிலத்தில் எல்லைப் பகுதியில் உள்ள இந்திய நகரமான குருதாஸ்பூரைத் தாக்கப்போவதாகத்தான் கையூம் கூறினார்; இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:—

"குருதாஸ்பூரில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கிறார்கள்; அப்படியிருந்தும், 1947-ல் இந்தியா—பாகிஸ்தான் பிரிவினையின்போது அந்த நகரத்தை, இந்தியாவுடன் சேர்த்துவிட்டார்கள்.

"இந்தப் பகுதியில் போர் துவங்கினால், குருதாஸ்பூரை குறி வைத்துத் தாக்குவோம்.

'காஷ்மீரை விடுவிக்க எங்கள் முழுப் பலத்தையும் திரட்டிப் போராடுவோம்; இந்தியாவிடமிருந்து குருதாஸ்பூரைக் கைப்பற்றிக்கொள்வோம்.

"எங்களுடைய முக்கியப் பிரச்சினையான காஷ்மீர் தகராறைத் தீர்க்க இந்தப் போரே இறுதியானதாக இருக்கும்."

300 ஆண்டுகளுக்கு முந்திய சிலைகள்

வயலில் கண்டுபிடிப்பு

புதுவை, டிச. 3—

புதுவையிலிருந்து சுமார் 10 மைல் தொலைவிலுள்ள லிங்கமேட்டில், வயல் ஒன்றைப் 'புல்டோசரை'க் கொண்டு பண்படுத்திக்கொண்டிருக்கையில், 300 ஆண்டுகட்கு முற்பட்ட நான்கு சிலைகளை விவசாயி ஒருவர் கண்டுபிடித்தார்; இவைகளின் மதிப்பு சுமார் ரூ 3 இலட்சம் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்டவை—சிவன் — பார்வதி, நடராசன் — சிவகாமி சிலைகளேயாகும்.

சிவன்—பார்வதி சிலைகள், அமர்ந்திருக்கும் நிலையில் உள்ளன; உயரம் ஒன்றரை அடியாகும்.

நடராசன் சிலை — நடனமிடும் நிலையில் இருக்கிறது; சிவகாமி சிலை நிற்கும் நிலையில் இருக்கிறது; இரண்டும் இரண்டடி உயரம்.

கைலாசநாதர் உருவம் செதுக்கப்பட்ட வலம்புரி சங்கு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சிலைகள் அனைத்தும் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இந்திய வரலாற்றில் புதிய கட்டம்

மன்னர் பரம்பரை சாதாரண சமுதாயம் ஆகிறது

அரச மானியத்தை ஒழிக்க வகை செய்யும் அரசியல் சட்டத் திருத்தம்

381 வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது

புதுடில்லி, டிச. 3 -

முன்னாள் மன்னர்களுக்கு அரச மானியம் தருவது — தனிச் சலுகை அளிப்பது போன்ற வசதிகளை ரத்துச் செய்யும் அரசியல் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம், இந்தியா, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கட்டத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறது!

இதேபோல் சமுதாய நீதி வழங்குவதற்கான வேறோர் அரசியல் சட்டத் திருத்தத்தை நேற்றுத்தான், நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

மன்னர்களுக்கான சலுகைகளை ஒழிக்கும் இந்த 26-வது திருத்தத்துக்கு ஆதரவாக 381 வாக்குகளும் — எதிராக 6 வாக்குகளும் கிடைத்தன.

திருத்தத் தீர்மானம் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மத்திய அமைச்சர் கரண் சிங், 'உலக நிலைமையை உணர்ந்து மன்னர்கள் இந்தச் சலுகைகளைத் தாமாகவே கைவிட முன்வர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

காஷ்மீர் மன்னரான இவர், தாமாகவே தமது சலுகைகளைக் கைவிட முன்வந்துள்ளார்.

மன்னர்கள் சங்கத் தலைவர் செய்க்வாட், திருத்தத்தைக் கடுமையாக எதிர்த்தார்; அரசர்களுக்கு, அவர்களின் உரிமையும் — நீதியும் மறுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே நாடாளுமன்ற மக்களவையில் இத்திருத்தம் நிறைவேற்றப்பட்டு மேலவையில் தோற்றுவிட்டதும், இது குறித்து குடியரசுத் தலைவர் போட்ட உத்தரவை செல்லுபடியற்றதாக்கித் தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்ததும் நினைவுகூரத்தக்கது.

"சிறிய மன்னர்களுக்கு ஏதாவது மானியம் தரப்பட வேண்டும்" என்று சிலர் வாதிட்டனர்; இது குறித்துப் பரிசீலிப்பதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.